தெளிவாக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே அது பற்றிய கருத்தை அறிவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இந்த ஊராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு, நிதி ஒதுக்கீட்டை தற்போது மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து இதற்கான நிதியினை ஒதுக்குகின்றன. ஆனால் இதிலே மத்திய அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்ட சட்ட முன்வடிவு பற்றி எதுவும் நம்மிடத்திலே இல்லை. ஆனால் நம்முடைய மாநில அரசால் அறிமுகம் செய்யப்படுகின்ற இந்தச்சட்டமுன்வடிவிலே இந்த நிதி ஒதுக்கீடு பொறுத்த வரையிலே மத்திய அரசு எவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்கிறது என்ற விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. நான் கேள்விப்பட்டவரையிலே மத்திய அரசானது நேரடியாக அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு தன்னுடைய நிதியினை ஒதுக்குவதற்கான ஒரு வழிமுறை இருப்பதுபோல் நான் அறிகிறேன். அப்படி ஒரு நிலைமை இருந்தால் அது மத்திய அரசு தன்னுடைய அதிகாரங்கள் பரவலை மீண்டும் தங்களுக்குக் கூட்டிக் கொள்வதற்குக் காரணமாக இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி மாநில அரசு மூலமாகத்தான் நிதிகள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியத்திற்கு விநியோகம் செய்யப்பட வேண்டும் ன்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக மொத்தத்தில் நம்முடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுடைய சிந்தனையில் உதித்த அவர்களுடைய அரசியல் வாரிசான புரட்சித் தலைவி அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட இருப்பதற்காக தயாராக இருக்கின்ற இந்தத்திட்டமானது தற்போது மத்திய அரசினால் 73-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலமாக அரங்கேறி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டமுன்வடிவாக இங்கே முன்வைக்கப்பட்டுள்ளது என்று கூறி, இதனை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

6. அறிவிப்புகள்

(ஆ) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு இன்று 19-4-1994 காலை கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவை நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,